RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2514

OPEN ACCESS

# எடுத்துரைப்பியல் நோக்கில் சேமித்து வைத்த நிழல்கள்

**பா. நாகேஸ்வரி [அ, *], இரா. பூங்கோதை [அ]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா

# Stored Shadows from a Narrative Point of View

**P. Nageswari [a, *], R. Poongothai [a]**

[a] Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur, Tamil Nadu, India

* Corresponding Author: nageswari@srnmcollege.ac.in

Received: 24-11-2024
Revised: 02-01-2025
Accepted: 12-01-2025
Published: 24-01-2025

Check for updates

**ABSTRACT**

Creativity is the expression of the innermost thoughts of man. Works appear according to the author's feelings. It is better to take what was written in each period with a chronology. The philosophy of life is that the advice of others inspires man to inspire himself so that the book of poems is useful to human society as the author explains. Man is divided in society due to various reasons. Thus it shows that nothing can happen due to division and we should live in unity. It emphasizes that a political officer should be a servant of the people. The female nature and the Nilothava flower illustrate that the human mind is like a sparrow's nest. This approach is designed to be relevant to the current society.

**Keywords:** Community, unity, Politics, Nature and woman, Solitude is sweet

## முன்னுரை

மனிதனின் ஆழ்மனக் கருத்துக்களை வெளியிடுவது படைப்பிலக்கியமாகும். ஆசிரியர்களின் உணர்வுகளுக்கேற்ப படைப்புகள் தோன்றும். அவற்றில் கவிதை சிறப்பிடம் பெறுகிறது. வானவில் கே.ரவி சென்னையில் புகழ்பெற்ற வழக்கறிஞர். வழக்கறிஞர் மட்டுமின்றி கவிஞர்> ஆய்வாளர்> சட்டவியலாளர் என்ற பன்முகத்தன்மைக் கொண்டவர். இளம்வயதிலே "மாணவரிஸம்" என்ற கையெழுத்து இதழை நடத்தியுள்ளார். வள்ளுவர்> பாரதியின் மீது மிகுந்த ஈடுபாடுகொண்டவர். அவரது கவிதைகளைத் தொகுத்து இசைப்பாடல்கள் அடிப்படையில் "சேமித்து வைத்த நிழல்கள்" என்னும் தலைப்பில் வெளியானது. ஒவ்வொரு காலக்கட்டத்தில் எழுதப்பட்டதை காலக்குறிப்புடன் எடுத்தியம்புவது சிறப்பாகும். இக்கவிதை நூலானது ஆசிரியர் எடுத்துரைக்கும் விதத்தில் மனித சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் வாழ்க்கைத் தத்துவம்> சமுதாய ஒற்றுமை> அரசியல் பார்வை> இயற்கையும் மனிதனும் போன்ற பலவாறான தன்மைக் கொண்டதாக அமைகிறது.

## எடுத்துரைப்பியல்

ஒரு நிகழ்ச்சி நடக்கிறது அந்த நிகழ்ச்சியை மொழிப்படுத்தும் போது நடக்கிற மாற்றங்களையும், அந்த மாற்றங்களை நிகழ்த்துகிற மொழியின் தன்னிசையான செயல் போக்கினையும் விளக்குவதே எடுத்துரைப்பியல் ஆகும். எடுத்துரைக்கும் நிலையினை க.பஞ்சாங்கம் மூன்று நிலைகளாக வகுத்துள்ளார். அவை,

1 நிகழ்ச்சிகள்

2 மொழி (அல்லது) வார்த்தைக் குறியீடுகள்
3 எடுத்துச் சொல்லும் செயல்பாடு

இவ்வாறாக வகைப்படுத்தியுள்ளார்.

## வாழ்க்கைத் தத்துவம்

மனிதன் வாழ்வில் முன்னேறுவதற்கு வேண்டிய பகிரலாக வாழ்க்கைத் தத்துவம் அமைகிறது. தன் வாழ்க்கையில் பெரிய சோதனைகளில் இருந்து வெற்றிப்பெற்ற சான்றோர்களின் அனுபவத் தத்துவமாக இவை அமையும். மனிதன் தன் வாழ்வில் தொடர்ச்சியாக ஒரு வேலையை செய்யும் போது அயர்வுறுகிறான். தனக்குப் பிடித்த செயல்களை செய்வதன் மூலமாக தன்னைத்தானே உற்சாகப்படுத்திக் கொள்கிறார். ஆசிரியர் இவற்றில் தனிமையினை

"தனிமை எங்கும் தனிமை - இந்த

மனித வாழ்வின் ப்ரணவ கீதம்

தனிமை என்றும் தனிமை

இனிய கவிதை மலரும் போது தனிமை

இரவில் உறங்கும் இதயம் முழுதும் தனிமை" (சே.வை.நி - ப.27)

இவ்வாறாகக் கூறுகிறார். தனிமையில் இருக்கும்போது மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்கிறான். தனிமையின் இனிமையில் படைப்பானது உருவாகும்> இரவில் எல்லாவற்றையும் மறந்து உறங்கும் இதயமும் கவலையின் போது நம்மை உற்சாகப்படுத்தி ஒளி கொடுப்பதும்> தவறு செய்த நிலையில் சுட்டிக்காட்டுவதும் அறிவு விரிவாவதற்கான ஞானம் உதயமாவதும் இவையெல்லாம் நம்மிடம் பிறக்கும் சூழல் தனிமையே ஆகும். தனிமை என்பது பிறரை விட்டு தனித்து இருப்பது என்ற பொருளல்ல மனதை பிறரின் எண்ணங்களுக்கு ஆட்படவிடாமல் நம்மை நாம்புரிந்து கொள்வது. இன்றைய காலத்தில் மனிதனுக்குள் மனிதன் உண்மை என்ற நிலைமாறி போலியாக நடித்துக் கொண்டிருக்கிறான். நம்முடைய மனமானது ஒரு நிமிடத்திற்கு பல இலட்சம் தூரங்கள் செல்லும் ஆற்றலுடையது. அவ்வாறு செல்லக்கூடிய மனதின் ஆசையானது சுற்றும் பூமியைக் கூட ஒரு நிமிடம் நிற்க வைக்க வேண்டும் என்று தோன்றும்.

## சமுதாய ஒற்றுமை

சமுதாயம் என்பது மிகப்பெரிய மக்கள் குழு. அது தனக்கென்று ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைக் கொண்டது. ஆசிரியர் இவற்றில் மக்கள் பல்வேறு இனங்களாக இருந்தாலும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். பிறப்பில் உயர்ந்தவர்> தாழ்ந்தவர் என்ற நிலை இல்லாமல் சமத்துவநிலை அமைய வேண்டும் என்பதை பாரதியும் கூறுகிறார். இதனை>

"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்

எல்லோரும் இந்தியமக்கள்

எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர்விலை

எல்லோரும் இந்நாட்டு மன்னர்" (பாரத சமுதாயம் பா-4)

எனப் பாடுகிறார். பாரதியின் கருத்தை பறைசாற்றும் விதமாக சாதியாலும்> கட்சிகளாலும்> மதங்களாலும் பிறரிடம் வெறுப்புக்காட்டுவதை விடுத்து அனைவரையும் உறவாக எண்ணுதல் வேண்டும். எதிரியாகவே இருந்தாலும் பிறர் கூறும் கருத்தினைக் கேட்க வேண்டும். இதனை ஆசிரியர்,

"ஒருஜாதி ஒருகட்சி ஓர் ஊருக்கே

உரியவனாய் இருக்கின்ற நிலைமை மாறி

ஒருமைப்பாட் டுணர்வுடைய அனைவரோடும்

ஒத்துழைத்து வாழ்கின்ற நேர்த்தி வேண்டும்” (சே.வை.நி - ப.193)

விளக்குகிறார். உலகில் அனைவரும் ஒருதாய் பிள்ளைகள் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். உருவங்கள் பலவாறாக இருப்பினும் உயிர் ஒன்றே என்று நினைத்து ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகைச் செய்கிறார்.

## அரசியல் பார்வை

மக்களை ஆட்சி செய்யும் மன்னவன் அவர்களின் தேவைகளைப் பூர்த்திச் செய்பவரே சிறந்த மன்னன் ஆவான். இதனை திருவள்ளுவர்

“எண்பதத்தான் ஓரா முறைசெய்யா - மன்னவன்

தண்பதத்தான் தானே கெடும்” (திருக்குறள் - 548)

இவ்வாறாக விளக்குகிறார். காட்சிக்கு எளியவராகவும் மக்களுக்கு வேண்டியவையை புரிந்து கொண்டு பூர்த்திச் செய்பவரே சிறந்த மன்னன் என்று என்றுரைக்கிறது. வானவில் ரவி அவர்கள் அரசியல் அதிகாரி இருக்க வேண்டிய நிலையை எடுத்துரைக்கிறார். இன்றைய கால அரசியல்வாதிகள் தன்னை எஜமானவர்களாகவும் மக்களை பணியாட்களாக எண்ணுகின்றனர். அரசன் மக்களுக்கு வேலை செய்பவராக எண்ண வேண்டும். தான் மக்களின் ஊழியன் என்ற நிலையில் பணி செய்தலும்> அறிஞர், கலைஞர்,; கவிஞர்களை மதிப்பவராய்> கட்சி பெரிதல்ல மக்களுக்கு வேலை செய்வதே கடமை என்று எண்ணுபவராக இருத்தல் வேண்டும். இதனை>

“கட்சி எனக்கு பெரிதில்லை - முதல்

கடமை மக்களுக்கே

நீங்கள் அழைத்தால் நானே வருவேன்

ஊர்வலங்கள் வேண்டாம்” (சே.வை.நி -ப.195)

என்பதை எடுத்துரைக்கிறது. அரசியல் அதிகாரியாக தேர்ந்தெடுக்கப்படுபவர் எளிய மனிதரைப் போன்று எந்தவித ஆடம்பரமும் இன்றி வாழுங்கள் என்றுரைக்கிறார். இன்றைய காலப் போக்கு அதிகாரிகள் தங்களை முன்னேற்றுவதற்கான வழிகளையே எண்ணுகின்றனர். தேர்தலின் போது மட்டுமே வந்து மக்களின் குறைகளை தீர்த்து வைப்பது போன்ற வாக்குறுதிகளை இட்டுச்செல்கின்றனர். ஆனால் வெற்றியடைந்ததற்கு பின்பாக மக்களை ஒரு பொருட்டாகவும் மதிப்பதில்லை. இதனைப் போன்ற காலச்சூழல் ஏற்பட்டால் மக்கள் ஆட்சி என்ற நிலை மாறி ஆட்சியாளர்களின் ஆட்சி என்பதே நிலைபெற்றுவிடும். ஆதலால் தேர்ந்தெடுக்கும் அரசியல் அதிகாரி நல்லவரா, ஆட்சிக்கு வந்தால் சேவை செய்வாரா என்பதை எண்ணி மக்கள் வாக்களிக்க வேண்டும்.

## இயற்கையும் மனிதனும்

இயற்கை மனிதனில் வாழ்வில் ஒன்றிணைந்தவையாகும். ஒன்று இல்லையென்றால் மற்றொன்று இல்லை. அன்றைய காலம் முதல் இன்று வரையிலும் மனிதன் இயற்கை மீதான கொண்ட அன்பு அப்படியே உள்ளது. சங்ககாலத்தில் மக்கள் நில அமைப்பிற்கேற்ப வாழ்க்கை அமைத்து வாழ்ந்துள்ளனர். பெரும்பாலாக இயற்கையை புகழ்ந்து பாடுவதில் பெண்ணே இயற்கையோடு மிகுந்த தொடர்புடையவர். கவிஞர் ரவி அவர்கள் பெண்ணை நீலோத்பவ மலருடன் ஒப்பிடுகிறார். இதனை>

“இத்தனை நேரம் இருட்டுக்குள்ளே

மறைந்து கிடந்த நீலோத்பலமே

புத்துணர்வோடு புறப்படுகின்றாய்

புதுமை சலித்துப் போகவில்லையா” (சே.வை.நி -ப.72)

இவ்வாறாக எடுத்துரைக்கிறார். பெண்ணானவளின் வாழ்க்கையானது ஒவ்வொரு நாளும் இருளுக்குள் இருந்து துவங்குகின்ற நீலோத்பவமலரை போன்று உள்ளது. நீலோத்பவமலரின் அழகைக் கண்டு செடி> கொடிகளும் வணங்கும் பறவைகளும் வாழ்த்து பாடுமாம். அதனைப் போன்றே தாயனாவர் தன் குடும்பத்திற்காக அனைத்து துன்பங்களையும் அடக்கிக் கொண்டு ஒவ்வொரு நாளும் புத்துணர்வோடு களிப்படையச் செய்கின்ற தன்மையை உடையவள் என்கிறார்.

மனிதனின் மன எண்ணம் எல்லாவற்றையும் விட ஆழமானது உயரமானது. உண்மை நிலையில் இருந்துகொண்டே ஒரே நொடியில் நினைத்த இடத்திற்கு செல்லும் திறன் மனதிற்கு உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அத்தகைய சிறப்புத்தன்மை நிறைந்த மனத்தினை தூய்மையாக வைத்துக் கொள்ளாமல் தேவையற்ற எண்ணங்களை எண்ணி குப்பையாக உள்ளது என்பதை

“குருவிக்கூடு போல நெனப்பு

குப்பையும் செத்தையும் குமிஞ்சிருக்கு

வானத்துல ஒரு இடி இடிச்சா - சொக்கப்

பனையைப் போலப் பத்தி எரியுது” (சே.வை.நி -ப.142)

உவமையின் வாயிலாக எடுத்துக்காட்டுகிறார். மனமானது ஒரு நிமிடம் கூட அமைதி அடையாது செயல்படுவன. தேவையற்றதை எண்ணிக்கொண்டிருக்கும் மனதினை பாராங்கல்லுக்கு இணையாக சுட்டப்படுகிறார். குருவிக்கூடானது பல குச்சிகளால் ஆன சிக்கலான வீடாக இருக்கும். அதனைப் போன்றே மனிதன் தேவையற்ற யோசனையில் ஆட்பட்டு குருவிக்கூட்டின் நிலையைப் போன்று குப்பையாக்குகிறான் என்பதை எடுத்துரைக்கிறார்.

## முடிவுரை

மனிதன் தன்னைத்தானே உத்வேகப்படுத்துவதற்கு பிறரின் அறிவுரை ஊக்கமளிப்பதாக வாழ்க்கைத் தத்துவம் அமைகிறது. சமுதாயத்தில் மனிதன் பல்வேறு காரணத்தினால் பிளவுபட்டு இருக்கிறான். அவ்வாறு பிளவினால் ஒன்றும் ஏற்படாது ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அரசியல் அதிகாரியாக வருபவர் மக்களுக்கு வேலை செய்யும் ஊழியனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. பெண்ணின் இயல்பையும் நீலோத்பவ மலரையும் மனிதனின் மனமானது குருவிக்கூடு போன்று உள்ளது என்பதை விளக்குகிறது. இவ்வாய்வானது நடப்பியலுக்கு ஏற்றாற்போன்ற சமூகத்திற்கு பயன்படும் வகையில் அமைந்துள்ளது

## References


திருவள்ளுவர், (2021) திருக்குறள் (டாக்டர் ந.சுப்பு ரெட்டியார் உரை), சுரா பதிப்பகம், சென்னை.

பாரதியார், (2011) பாரதியார் கவிதைகள், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை.

ரவி, கே. (2021) சேமித்து வைத்த நிழல்கள் (கவிதைகளும், இசைப்பாடல்களும்), நிவேதிதா பதிப்பகம், சென்னை.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License